முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.8.2025) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு நேரில் சென்று அங்கு சிகிச்சை பெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்களின் உடல்நிலை குறித்து அவரது குடும்பத்தினருடன் கேட்டறிந்து, மருத்துவர்களிடம் அவருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி மற்றும் நல்லகண்ணு அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

உலகமயமாகிறார் பெரியார்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



சென்னை, ஆக.31- ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படம் திறக்கப்படவுள்ளது குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உலகமயமாகிறார் பெரியார்!

"ஆதிக்கம்தான் என் எதிரி" என முழங்கிச் சாதியாலும் பாலினத்தாலும் ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகச் சுற்றிச் சுழன்று பரப்புரை செய்த தந்தை பெரியார் அவர்கள் உலகம் முழுமைக்குமானவர்!

சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டினையொட்டி உலகப்புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில், செப்டம்பர் 4 அன்று நடைபெறும் கருத்தரங்கினில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் உருவப்படத்தினைத் திறந்து வைத்து, தென்னக மயக்கம் தீர்த்த சுயமரியாதை இயக்கம் குறித்த இரு நூல்களையும் பன்னாட்டு அறிஞர் பெருமக்கள் முன்னிலையில் வெளியிடுகிறேன்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; பெரியாரியம் உலகத்தவர் அனைவருக்கும்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு வங்கத்திலும் – தேர்தல் ஆணையம் வாக்காளர்களை நீக்க முயற்சி!

"நான் உயிருடன் இருக்கும் வரை வாக்குரிமையைப் பறிக்க விடமாட்டேன்"!

முதல்வர் மம்தா பானர்ஜி ஆவேசம்!

கொல்கத்தா, ஆக. 31 - பீகாரில் மேலும் 3 லட்சம் வாக்காளர்களை நீக்கும் பணிகளை, தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது பீகார் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இதேபோல், அடுத்தாண்டு தேர்தல் நடைபெறும் மேற்கு வங்க மாநிலத்திலும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்துக்கு தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது.

பீகாரில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது 7 கோடியே 89 லட்சம் வாக்காளர்கள் இருந்தனர்.

அம்மாநிலத்திற்கு இந்தாண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் இலட்சக்கணக்கான மக்களின் வாக்குரிமையை தேர்தல் ஆணையம் பறித்து பா.ஜ.க.வுக்கு ஆதரவாக செயல்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 65 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் நீக்கியது.

இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், மேலும் 3 லட்சம் வாக்காளர்களை நீக்கும் பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

உரிய ஆவணங்கள் அளிக்கவில்லை என்று கூறி, 3 லட்சம் வாக்காளர்களுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் வழங்கியுள்ளது. ஒரு வாரத்தில் ஆவணங்கள் அளிக்க வேண்டும் என்று கெடு விதித்துள்ளது. இதனால், வாக்காளர் பட்டியலில் இருந்து 3 லட்சம் பேர் நீக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, அடுத்தாண்டு தேர்தல் நடைபெறும் மேற்கு வங்க மாநிலத்திலும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்துக்கு தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது. கொல்கத்தாவில் தேர்தல் ஆணையம் இன்று அனைத்து கட்சி கூட்டத்தை நடத்துகிறது. வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ள போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளருக்கும், அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் கடந்த 27 ஆம் தேதி தேர்தல் ஆணையம் கடிதம் எழுதியுள்ளது.

அதன் தொடர்ச்சியாக அனைத்துக் கட்சி கூட்டத்தை தேர்தல் ஆணையம் கூட்ட உள்ளது குறிப்பிடத் தக்கது.

இதற்கிடையே, மேற்கு வங்க மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பேரணியில் பங்கேற்று பேசிய மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, நாடு முழுவதும் வங்காளிகள் மீது பா.ஜ.க. மொழி பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளது என்றார்.

வாக்காளர் பட்டியலில் இருந்து வாக்காளர்களின் பெயர்களை நீக்கும் நோக்கில், நாடு முழுவதும் இருந்து 500க்கும் மேற்பட்ட குழுக்களை மேற்கு வங்கத்திற்கு பா.ஜ.க. அனுப்பியுள்ளதாகவும், கணக்கெடுப்பு என்ற பெயரில் யாராவது வீட்டிற்கு வந்தால் அவர்களிடம் விவரங்களைத் தர வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளார். அந்தத் தரவைப் பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவார்கள் என்றும் தெரிவித்தார். "தான் உயிருடன் இருக்கும் வரை மக்களின் வாக்குரிமையை யாரும் பறிக்க விட மாட்டேன்" என்றும் முதலமைச்சர் மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும்

இந்தியக் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு உடல்நிலை!

குடும்பத்தினரிடம் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்!

சென்னை, ஆக.31- மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களின் உடல்நிலை குறித்து அவரது குடும்பத்தினர் மற்றும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

தகைசால் தமிழர் தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களது உடல் நலன் குறித்து மருத்துவர்கள், அவரது குடும்பத்தினர் மற்றும் தோழர் முத்தரசன் உள்ளிட்ட தோழர்களிடமும் நேரில் கேட்டறிந்தேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் – 'அனைவருக்கும் ஐ.ஐ.டி.' திட்டத்தின்கீழ்

சென்னை - ஐ.ஐ.டி.யில் 381 அரசுப் பள்ளி மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பு!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

சென்னை, ஆக. 31 - அனைவருக்கும் ஐ.ஐ.டி. திட்டத்தின்கீழ் சென்னை ஐ.ஐ.டி. பி.எஸ். தரவு அறிவியல், எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம் ஆகிய இணையவழி படிப்புகளை 2022-ஆம் ஆண்டில் அறிமுகம் செய்தது. இதற்கென பிரத்யேக நுழைவுத் தேர்வை ஐ.ஐ.டி. நடத்துகிறது.

அந்த தேர்வில் வெற்றி பெறுபவர்கள் இந்த 2 படிப்புகளை இணைய வழியில் படித்துக் கொள்ளலாம். வேலைவாய்ப்புக்கு உத்தரவாதமுள்ள இந்த படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களை அதிகளவில் சேர்க்க ஏதுவாக பள்ளிக்கல்வித் துறை பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது. இந்த படிப்புகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அதற்கான தகுதித் தேர்வுக்கு தயார்ப்படுத்தும் பணிகளும் தமிழ்நாடு அரசால் முன்னெடுக்கப்படுகின்றன. தேர்வாகும் மாணவர்களின் பெற்றோர் வருமானம் ஆண்டு ஒரு லட்சம் ரூபாய்க்கும் குறைவாக இருந்தால், அவர்களின் கல்விக் கட்டணத்தில் 75 சதவீதத்தை ஐ.ஐ.டி.யே வழங்குகிறது. மீதமுள்ள 25 சதவீதத்தை எஸ்.சி., எஸ்.டி. மாணவர்களாக இருப்பின் அவர்களுக்கான கட்டணத்தை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் செலுத்துகிறது. மற்ற பிரிவினர் அந்த 25 சதவீத கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதும். இணைய வழி கற்றல் என்பதால் இதனுடன் சேர்த்து வேறு படிப்புகளையும் மாணவர்கள் தொடரலாம். அதாவது, ஒரேநேரத்தில் 2 பட்டப் படிப்புகளை மாணவர்கள் முடிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் 2022 முதல் இது வரை 353 அரசுப் பள்ளி மாணவர்கள் பலன் பெற்றுள்ளனர். தொடர்ந்து நடப்பாண்டிலும் இந்த படிப்புகளில் சேர 170 பேர் தகுதித் தேர்வை எழுதினர்.

அதில் 28 பேர் வெற்றி பெற்று, சென்னை ஐ.ஐ.டி.யில் பி.எஸ், தரவு அறிவியல், எலக்ட்ரானிக்ஸ் சிஸ்டம் படிப்புகளில் சேர இருக்கின்றனர்.

இதனிடையே, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தும் திட்டங்களின் துணையோடு அரசுப் பள்ளி மாணவச் செல்வங்கள் கல்வியில் உயரங்களை எட்டிப் பிடித்து சாதனை படைக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார். அந்த வகையில், அனைவருக்கும் ஐ.ஐ.டி. திட்டத்தின் கீழ் நமது அரசுப் பள்ளி மாணவர்கள் 28 பேர் ஐ.ஐ.டி. மெட்ராஸ் நிறுவனத்தில் இணைந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதாகவும், மாணவச் செல்வங்களுக்கு அன்பு வாழ்த்துகள் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொருளாளர்

ஜனகராஜ் தந்தை இராஜாமணி மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 31-

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொருளாளர் ஜனகராஜின் தந்தை இராஜாமணி அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொருளாளர் ஜனகராஜ் அவர்களின் தந்தையார் இராஜாமணி அவர்கள் மறைந்த செய்தியால் வேதனையடைந்தேன்.

உணர்வூட்டி வளர்த்த அன்புத் தந்தையினை இழந்து தவிக்கும் ஜனகராஜ் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி
ஆகஸ்ட் 31 (2012)



தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கழுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

கழுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். 'மிசா'வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

"அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கொரடாச்சேரி தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர்

பரசு என்கிற பரசுராமன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஆக.31- திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி தெற்கு ஒன்றியக் கழக துணைச் செயலாளர் கழக செயல் மறவர் பரசு என்கிற கே.பரசுராமன் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த கே.பரசுராமன், கொரடாச்சேரி ஒன்றியக்குழு முன்னாள் உறுப்பினரும், கொரடாச்சேரி தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணியின் சமூகவலைதள ஒருங்கிணைப்பாளர் ப.மணிகண்டனின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் மறைவு தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர், அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள் உள்ளிட்டோரும், கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும், இரங்கலையும் தெரிவித்துள்ளனர்.

மறைந்த கே.பரசுராமன் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று (30.08.2025) மாலை அவரது சொந்த ஊரான அம்மையப்பனில் நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.வி.எம்.அ. பொன்மொழி
ஆகஸ்ட் 31 (2017)



பள்ளிப்பருவமாகிய 1965–ல் தான் பயின்ற பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி, இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி முதல் அமைப்பாளர், மாவட்ட மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி தலைவராகவும், கலைஞர் பட்டுக் கூட்டுறவு சங்க இயக்குநராகவும், திருவள்ளூர் பட்டுக் கூட்டுறவு சங்க தலைவராகவும் பொறுப்பேற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"இவரின் நலப்பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கும். அவர் விட்டுச் சென்ற கழக பணிகள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொண்டரின் உள்ளத்திலும் குடியிருக்கும்" என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.